## டி.எம்.எஸ் — வண்ணாரப்பேட்டை மெட்ரோ:

# சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் விழா!

## பந்தலில் எல்.இ.டி. திரையமைப்பு!!

சென்னை, பிப். 10–

சென்னையில் வசிக்கும் பொதுமக்கள் மெட்ரோ சேவை நீட்டிப்பு விழாவை காணும் வகையில் சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்துக்குஎதிரேசுமார்2 ஆயிரம் பேர் அமரும் வகையில் பந்தல்போடப்பட்டு,அதில் பெரிய அளவிலான எல்.இ.டி.,திரைஅமைக்கப்பட்டிருந்தது.

சென்ட்ரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் உள்ள 2அடுக்குகளில்முதல்அடுக்கில் கோயம்பேடு மார்க்கத்தில் இருந்து வரும் ரெயில்கள் கையாளப்படுகின்றன. அதற்கு கீழ் சுமார் நூறு அடி ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ள 2வது அடுக்கில் அண்ணாசாலை மார்க்கத்தில் இருந்து வண்ணாரப்பேட்டை நோக்கி வரும் ரெயில்கள் கையாளப்படுகின்றன.

2வது அடுக்கில் உள்ள பிளாட்பாரத்தில் எல்.இ.டி. திரையுடன்மேடைஅமைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மெட்ரோ ரெயில் போக்குவரத்தை பிரதமர் மோடியும், முதல்வர் எடப்பாடி பழனிசாமியும் இன்று மாலை காணொலி காட்சி மூலம் தொடங்கி வைத்ததும்,

விழா மேடையில் இருக்கும் மத்திய நகர்ப்புற மேம்பாட்டுதுறைமந்திரிஹார்தீப் சிங் பூரி, தமிழக அமைச்சர்கள் ஜெயகுமார், எம்.சி.சம்பத் ஆகியோர் மெட்ரோ ரெயிலுக்கு பச்சை கொடி காட்டினார்கள்.

அவர்கள் கொடி அசைத்ததும் முதல் ரெயில் சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் இருந்து வண்ணாரப்பேட்டை நோக்கி புறப்பட்டுச்சென்றது. ரெயிலில் அமைச்சர்கள் மற்றும் முக்கியபிரமுகர்கள்பயணம் செய்தனர்.

விழா நடைபெறும் இடத்தை அமைச்சர் எம்.சி.சம்பத் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்துஇறுதிகட்டமாக ரெயிலை ஓட்டிப்பார்த்து சோதனையும் நடத்தப்பட்டது.




சென்னை–தேனாம்பேட்டை டி.எம்.எஸ்.– வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரெயில் விரிவாக்க சேவையை பிரதமர் மோடி இன்று தொடங்கி வைத்தார். இந்தப் பாதையில் உள்ள ஆயிரம் விளக்கு ரெயில் நிலையத்தை காணலாம்.